தே.மதியழகன் எம்.எல்.ஏ. - ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# கிருஷ்ணகிரியில் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா!

## அமைச்சர் அர.சக்கரபாணி சிறப்புரை!

கிருஷ்ணகிரி , நவ.21-

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒரப்பம் ஊராட்சி, ஜெய் ஸ்ரீ கல்யாண மண்டபத்தில், 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவினை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்ட ஆட்சித் தலைவர் கே.எம்.சரயு, மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் தே.மதியழகன், ஒய்.பிரகாஷ் மற்றும் ஒசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ. சத்யா ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார்

இந்நிகழ்ச்சிக்கு, இணைப் பதிவாளர் கோ.நடராஜன் வரவேற்புரை ஆற்றினார். தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் மேலாண்மை இயக்குநர் மலர்விழி அவர்கள் திட்ட விளக்கவுரையாற்றி னார்.

அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

கூட்டுறவு வார விழாவானது, அகில இந்திய அளவில் ஆண்டுதோறும் நவம்பர் 14 ஆம் தேதி துவங்கி நவம்பர் 20 ஆம் தேதி வரை ஒரு வாரத்திற்கு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. தற்பொழுது 71வது அனைத்திந்தியக் கூட்டுறவு வாரவிழா தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, 'தமிழ் நாட்டின் சமூக பொருளாதார மேம்பாட்டில் கூட்டுறவின் பங்கு" எனும் கருப்பொருளை மையமாகக் கொண்டு கொண்டாடப்பட்டு வருகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 120 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 56

இதர கூட்டுறவு கடன் சங்கங்கள் என மொத்தம் 176 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

இச்சங்கங்கள் வேளாண் மேம்பாடு , மகளிர் மேம்பாடு, சிறுபான்மையினர் மேம்பாடு, பிற்படுத்தப்பட்டோர் மேம்பாடு , மற்றும் சமூகத்தில் நலிவுற்ற மக்களின் மேம்பாட்டிறகு சிறந்த சேவையாற்றி வருகின்றன.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 120 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் 2023-2024 ம் ஆண்டிற்கு 38,303 விவசாயி களுக்கு ரூ.374.67 கோடி மதிப்பிலும், நடப்பு நிதி ஆண்டிற்கு (2024-2025) நாளது தேதி வரை 17,957 விவசாயி களுக்கு ரூ.185.52 கோடி மதிப்பில் வட்டியில்லா பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது.

அதேப்போல், 120 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் கடந்த 2023-2024 ம் நிதி ஆண்டில் 11,704 விவசாயி களுக்கு ரூ.46.56

கோடி மதிப்பிலும், நடப்பு நிதியாண்டில் (2024-2025) நாளதுதேதி வரை 5,299 விவசாயிகளுக்கு ரூ.21.51 கோடி மதிப்பில் வட்டியில்லா கால்நடை பராமரிப்புக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த2023-2024 ம் நிதி ஆண்டில் 912 சுயஉதவிக்

குழுக்களுக்கு ரூ.141.01 கோடி மதிப்பிலும் நடப்பு நிதியாணடில் (2024-2025) நாளது தேதி வரை

606 சுயஉதவி குழுக்களுக்கு ரூ.63.72 கோடி மதிப்பில் மகளிர் சுய உதவிக்குழுக் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கடந்த 2023 2024 ம் நிதி ஆண்டில் 1,18,273 பொது மக்களுக்கு ரூ.969.39 கோடி மதிப்பிலும், நடப்பு நிதியாண்டில் (2024-2025) நாளதுதேதி வரை 71,899

பொதுமக்களுக்கு ரூ.546.79 கோடி அளவிற்கு நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் 2,36,862 முன்னுரிமை குடும்ப அட்டை தாரர்கள், 2,66,716 முன்னுரிமை அற்ற குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் 64,305 அந்தியோதய அன்னயோஜனா அட்டைதாரர்கள் என மொத்தம் 5,67,883 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்று வருகிறார்கள். மேலும், கூட்டுறவுத் துறை மூலம் 1143 நியாயவிலைக் கடைகள், தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் 36 நியாய விலைக் கடைகள் என மொத்தம் 1179 நியாயவிலைக் கடை கள் மூலம், 5,67,871 குடும்ப அட்டைதாரார்கள் பயன் பெற்று வருகிறார்கள். கடந்த ஜுன் 2021 முதல் புதியதாக 50,312 மின்னணு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு பயன் பெற்று வருகின்றனர்.

கடந்த ஜுன் 2021 முதல் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதியதாக 14 முழுநேர நியாயவிலைக் கடைகளும், 58 புதிய பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் மற்றும் 43 பகுதிநேர நியாயவிலைக் கடைகளை முழுநேர நியாயவிலைக் கடைகளாகவும் மாற்றப்பட்டு நாளது தேதி வரை மொத்தம் 115 நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் எளிதில் அணுக இயலாத பகுதிகளில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்களும் தங்களது இருப்பிடதிற்கு அருகாமையிலேயே அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பொதுவிநியோக திட்டத்தின் கீழ் பயன்பெற்று வரும் அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் உணவுப்பொருள் வழங்கும் பொருட்டு, எவ்வித புகாருக்கும்

இடமின்றி சரியான அளவில் அத்தியாவசிய பொருட்கள் தங்கு தடையின்றி பெற்றிடும்வகையில் ஆன்லைன் மூலம் மின்னனு குடும்ப அட்டை வழங்கப்பட்டு, விற்பனை முனைய கருவி மூலம் ஸ்கேன் செய்தும் கைரேகை படிப்பியல் கருவி மற்றும் கருவிழி படிப்பியல் கருவிகள் உள்ளிட்ட நவீன தொழில்நுட்பம் மூலம் உரிய பயனாளிகளுக்கு சென்றடைவதை உறுதி செய்யப்பட்டுள்ளது என அமைச்சர் அர.சக்கர பாணி தெரிவித்தார்.

தொடர்ந்து, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் ஒசூர் சரக சுய உதவிக் குழு கூட்டுறவு சங்க கிளை, போச்சம்பள்ளி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க கிளை மற்றும் பெல்லாரம்பள்ளி தொடக்க வேளாண்மை

கூட்டுறவு கடன் சங்கம் ஆகிய 3 புதிய கிளைகளை துவக்கி வைத்தார்.

தொடர்ந்து, சிறப்பாக செயல்பட்ட 39 கூட்டுறவு சங்கங்களுக்கு பாராட்டு கேடயங்களும், ஓவியம், கட்டுரை மற்றும் பேச்சு போட்டியில் வெற்றிபெற்ற 9 பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

மேலும், 147 நபர்களுக்கு ரூ.2 கோடியே 32 இலட்சத்து 38 ஆயிரம் மதிப்பில் பயிர் கடனும்,

92 பயனாளிகளுக்கு ரூ.50 இலட்சத்து 32 ஆயிரம் மதிப்பில் கால்நடை பராமரிப்பு கடனும், 220 பயனாளிகளுக்கு ரூ.2 கோடியே 98 ஆயிரம் மதிப்பில் சுய உதவிக்குழு கடனும், 34 ரூ.18 இலட்சத்து 85 ஆயிரம் மதிப்பில் சிறு வணி கடனும் 2 பயனாளிகளுக்கு

ரூ.1 இலட்சம் மதிப்பில் கைம்பெண்கள் கடனும், 2 பயனாளிகளுக்கு ரூ.70 ஆயிரம் மதிப்பில் கைவினைக் கலைஞர் கடனும், 11 பயனாளிகளுக்கு ரூ.5 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் குறு, சிறு தொழில் கடனும், 10 பயனாளிகளுக்கு ரூ.2 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பில் பண்ணை சாரா கடனும் , 21 பயனாளிகளுக்கு

ரூ.10 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பில் மகளிர் தொழில் முனைவோர்கடனும், 5 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 2 இலட்சத்து 14 ஆயிரம் மதிப்பில் மாற்றுத் திறனாளி கடனுதவியும் என மொத்தம் 544 பயனாளிகளுக்கு ரூ. 5 கோடியே 24 இலட்சத்து 47 ஆயிரம் மதிப்பிலான கடனு தவிகளை வழங்கினார்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; "மற்ற மாநிலங்கள் அதிக நிதிப் பகிர்வைக் கோரினாலும், தமிழ்நாடு அரசுதான் தங்களுக்கு நிதிப் பகிர்வை அளிப்பதற்கு என்னென்ன காரணங்கள் என அளித்துள்ள விளக்கம் மிகச் சிறந்தது" என்று 16 ஆவது நிதிக் குழுத் தலைவர் அரவிந்த பனகாரியா பாராட்டிக் கூறியிருக்கிறாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; பாராட்டோடு நின்று விடாமல், தமிழ் நாட்டுக்கான நிதிப் பகிர்வையும் நியாயமாகச் செய்ய வேண்டும். பாராட்டுச் சொற்கள் மட்டும் பசியை ஆற்றிவிடாது !**

# தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி மாநில நிர்வாகிகள் - தகவல் தொழில் நுட்ப அணியின் தொகுதி பார்வையாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க, தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணியின் மாநில நிர்வாகிகள் மற்றும் தொகுதி பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கும் நிர்வாகிகள் கூட்டம் (21-11-2024 - வியாழன்) மாலை 4 மணிக்குக் கழக தகவல் தொழில்நுட்ப அணி அலுவலகத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் நிர்வாகிகள் அனைவரும் தவறாது பங்கேற்க வேண்டும்.

பொருள்: 1. 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள்

2. கழகத் தகவல் தொழில்நுட்ப அணியின் ஆக்கப் பணிகள்

3. துணை முதலமைச்சரின் பிறந்தநாள் நலத்திட்ட பணிகள்.

முனைவர் **டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்
தி.மு.க.தகவல் தொழில்நுட்ப அணி.



திருப்பூர் வடக்கு மாவட்டம் திருமுருகன் பூண்டி ஒன்றியத்திற்குட்பட்ட வேலாயுதம்பாளையம் ஊராட்சியில் அ.தி.மு.க ராயன் கோவில் கிளை கழக செயலாளர் ஆர்.வி.கிருஷ்ணகுமார் தலைமையில் 25க்கும் மேற்பட்டோர் அவிநாசி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் – மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளர் டாக்டர் கிருபா கோகுல் சங்கர், ஒன்றிய கழகச் செயலாளர் எஸ்.ஆர். பழனிச்சாமி முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.சரவணன் நம்பி, மாவட்ட இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் சு.செல்வரங்கம், பொதுக்குழு முன்னாள் உறுப்பினர் மு.சிவபாலன் உள்பட பலர் உள்ளனர்.

# எடப்பாடிகளும், ஜெயக்குமார்களும் சொல்ல மறந்தது ஏன்? சொல்லாமல் மறைத்தது ஏன்?

கிண்டி கலைஞர் நூற்றாண்டு அரசு மருத்துவமனையில் புற்றுநோய் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பிரேமா என்ற பெண்மணி கடந்த காலத்தில் எஸ்.ஆர்.எம், சவிதா, போன்ற தனியார் மருத்துவமனையிலும், அரசு மருத்துவமனையிலும் அவ்வப்போது சிகிச்சை பெற்று வந்தவர். தற்போது அவருடைய மகன் விக்னேஷ் என்பவர் தன் தாயாருக்குப் புற்றுநோய் குணமாகாத கோபத்தில், சிகிச்சை அளித்த மருத்துவர் பாலாஜியைப் பணி செய்து வந்த கலைஞர் நூற்றாண்டு அரசு மருத்துவமனையிலேயே கத்தியால் குத்தியுள்ளார் என்று தெரிகிறது. இப்படிப்பட்ட மருத்துவர்கள் மீது நடத்திய கொலை வெறிச் செயலை எவரும் ஏற்க முடியாது. ஆனால், அ.தி.மு.க., பா.ஜ.க., பா.ம.க. போன்ற கட்சித் தலைவர்கள் தங்கள் கருத்துரைகளை ஆலோசனைகளாக வழங்குவதற்குப் பதிலாக, ஆத்திரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டி அரசியல் நடத்தி வருகிறார்கள்.

இந்நிலையில் கழக அரசு மீதும் முதலமைச்சர் மீதும் சட்ட ஒழுங்கு பற்றி எடப்பாடி பழனிச்சாமி மற்றும் சிலர் குற்றச்சாட்டுகள் எடுத்து வைக்கின்றனர்.

"கொடுங் குற்றங்களைக் கூட எந்த இடத்திலும் துளியும் அச்சமின்றி குற்றவாளிகள் செய்யலாம் என்கின்ற அளவிற்குச் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ள தி.மு.க. அரசுக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவிக்கிறேன்" என எடப்பாடி பழனிச்சாமி சொல்லுகிறார். அதைப்போல "மருத்துவமனையில் பணியாற்றி வரும் மருத்துவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பில்லை" என்று கலைஞர் நூற்றாண்டு மருத்துவமனை சென்று டாக்டர் பாலாஜியைச் சந்தித்து விட்டு வந்த முன்னாள் மந்திரி விஜயபாஸ்கர் பேட்டி அளித்துள்ளார். மற்றொரு முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் "அ.தி.மு.க. ஆட்சியில் இப்படி மருத்துவர்கள் மீது எந்த தாக்குதலும் நடைபெறவில்லை, தி.மு.க ஆட்சியில் சட்ட–ஒழுங்கு சீர்கெட்டு விட்டது" என்று அக்னி சாட்சியம் செய்ததைப் போலச் செய்தியாளர்களிடம் புலம்பல் கச்சேரி நடத்தி விட்டு சென்றிருக்கிறார்.

பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்கும் விதத்தில் அரசு மருத்துவமனைகளில் பணிபுரிந்து வரும் மருத்துவர்கள், மருத்துவ பணியாளர்கள் மற்றும் நோயாளிகள் போன்றவர்களுக்கு எந்தவித அசம்பாவிதம் நடைபெறுவதைத் கழக அரசு பார்த்துக் கொண்டிருக்காது. அப்படி ஏதாவது நடைபெறுமானால், குற்றவாளிகள் தண்டிக்கப்படுகிற விதத்தில் சட்டப்படியான குற்றவியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதைத்தான் தளபதி அவர்கள் "நோயாளியின் குடும்ப உறுப்பினர் உச்சரித்த மருத்துவர் பாலாஜியைக் கத்தியால் குத்திய சம்பவம் அதிர்ச்சி அளித்துள்ளது; மருத்துவர் பாலாஜிக்கு உரிய சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சம்பவம் குறித்து விசாரணை செய்து விரிவான அறிக்கைத் தரக் கோரி உத்தரவிட்டிருக்கிறேன்.

மருத்துவரின் பாதுகாப்பை உறுதி செய்வது அனைவருக்கும் கடமை. இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். சிகிச்சை பெற்று வரும் டாக்டர் பாலாஜியுடன் கைபேசி மூலம் நான் நலம் விசாரித்து ஆறுதல் கூறியுள்ளேன்" என்று கூறியுள்ளார். அது மட்டும் இல்லாமல் நேரில் சென்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் துரைமுருகன், மா.சுப்பிரமணியன், போன்றோர் பாதிக்கப்பட்ட மருத்துவரிடம் நலம் விசாரித்து ஆறுதல் கூறியதோடு குற்றவாளி மீது தகுந்த குற்றவியல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதுடன், தக்கப் பாதுகாப்பு வசதியை மருத்துவர்களுக்கும், ஊழியர்களுக்கும், நோயாளிகளுக்கும் மேலும் உருவாக்கித் தரப்படும் என்றும் கூறியுள்ளனர்.

"அரசு மருத்துவமனைகளில் தரமான பாதுகாப்பான மருத்துவச் சிகிச்சை கிடைக்கிறது என்பதைத் தமிழ்நாடு அரசு உறுதி செய்ய வேண்டும்" என்று தமிழிசை சௌந்தரராஜன் அவருக்கே உரிய அரசியல் ஞானத்தோடு (?) பேசியுள்ளார் .இதற்குப் பதிலளிக்கிற விதத்தில், புள்ளி விவரங்கள் தந்துள்ளார் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன். "தளபதி ஆட்சியில் தரமான சிகிச்சை கிடைத்துக் கொண்டிருக்கிறது. 2021 ஆம் ஆண்டுக்கு முன் புறநோயாளிகள் எண்ணிக்கை அரசு மருத்துவமனையில் 6,000 பேர் தான். இன்று 12 ஆயிரம் முதல் 15,000 பேர் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். கோவையில் 3,000 பேர் என்று இருந்தது. இப்பொழுதும் 6,000 பேர் புற நோயாளிகள் சிகிச்சை பெறுகிறார்கள். மதுரையில் 2,500 பேர் வந்தவர்கள் இப்பொழுது 4,000 பேர்க்கு மேல் சிகிச்சை பெற்றுச் செல்கிறார்கள். திருச்சி போன்ற பெருநகரங்களில் இதே போன்று நோயாளிகள் வந்து சிகிச்சை பெறுகிறார்கள்" என்று தகுந்த புள்ளி விவரங்களை அள்ளித் தந்து இருக்கிறார்.

இந்தியாவிலுள்ள 36 மாநிலங்களில் தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத்துறை மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது அதற்கான விருதுகள் தமிழ்நாடு அரசு பெற்றுள்ளது. தேசிய தர நிர்ணயச் சான்றிதழ்கள் (N.Q.A.S) பெற்றுள்ளது 2021 மே மாதம் முதல் இப்போதுவரை (N.Q.A.S) விருதுகள் 69 பெற்றுள்ளது. அதன் பிறகு, தளபதியார் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தி.மு.க ஆட்சியில் தமிழ்நாட்டுக்கு 545 விருதுகள் கிடைத்துள்ளது. ஆக மொத்தம் 614. விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்பதைத் தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தண்டோரா போடும் தமிழிசை போன்றோருக்கு நினைவுபடுத்தியுள்ளார்.

உலக அளவில் ஆயிரம் பேருக்கு எத்தனை மருத்துவர்கள் செயல்பட்டு வருகிறார்கள்? என்பதை ஒவ்வொரு நாட்டிலும் புள்ளி விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. அதன்படி ஒரு பட்டியல் அளிக்கப்பட்டு இருக்கிறது. அதில் ஆஸ்திரேலியா 3.7/1,000, இங்கிலாந்து (யுனைடெட் கிங்டம்) 2.9 /1,000, அமெரிக்கா 2.6 /1,000 , பிரான்சு 2.3/ 1,000, தென்கொரியா 2.3/1,000, சீனா 2.0 / 1,000, இந்தியா 0. 8/1,000 ஆனால், இந்தியாவில் இருக்கும் ஒரு மாநிலமான தமிழ்நாடு 4.0 /1,000 என்ற விதத்திலே மருத்துவர்கள் செயல்பட்டு வருகிறார்கள் என்று அந்தப் பட்டியல் நீள்கிறது. இதற்குப் பாஜக கட்சி மருத்துவர் தமிழ் இசைகள் என்ன சொல்லப் போகின்றனர் ?

அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் ஜெயலலிதா மற்றும் எடப்பாடி பழனிசாமி ஆகியோர் ஆண்ட போது பல்வேறு சம்பவங்கள் மருத்துவமனையில் இதுபோன்று மருத்துவர்கள் மீது தாக்குதல் நடைபெற்றிருக்கின்றன. எங்களது ஆட்சியில் இப்படி ஏதும் நடைபெறவில்லை என்று ஜெயக்குமார்கள் எடப்பாடிகளின் ஜெகதாள பிரதாபனாக மாறிச் சபதம் போடுகிறார்கள். இவர்கள் கூறுவது எல்லாம் உண்மையா?

எடப்பாடியின் தலைமையான அ.தி.மு.க. ஆட்சியில் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் மருத்துவர்கள் சிலரால் தாக்கப்பட்ட கொடுமை நடைபெற்றது. பெரிய விவகாரமாக உருவெடுத்து போராட்டம் நடத்தப்பட்டது. 2017 மே மாதம், கோவை மருத்துவமனை இருப்பிட மருத்துவ அதிகாரி (R.M.O) மீது தாக்குதல் நடந்துள்ளது. 2018 டிசம்பர் மாதம் கொடைக்கானல் அரசு மருத்துவமனை செவிலியர்கள் இதுபோன்று தாக்குதல் நடத்தப்பட்டு போராட்டமாக வெடித்தது. 2019 ஜீன் மாதம் மதுரை அரசு மருத்துவமனை திருப்பரங்குன்றம் பிரசவ வார்டு மருத்துவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுக் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. 2018 ஜீன் மாதம் திருப்பரங்குன்றம் அரசு மருத்துவமனையில் அங்கையற்கண்ணி என்னும் மருத்துவரை மூன்று பெண்கள் சேர்ந்து தாக்கி காயப்படுத்தி உள்ளனர். 2017 ஆம் ஆண்டு மார்ச் இராஜீவ் காந்தி மருத்துவர் ஒருவர் வெளியில் இருந்து வந்தவர்களால் தாக்கப்பட்டதால், மருத்துவர்கள் தொடர் போராட்டம் நடத்தப்பட்டது .

2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கொடைக்கானல் அரசு மருத்துவமனையில் செவிலியர்கள் மீது தாக்குதல் நடத்தி உள்ளனர். 2019 ஆம் தேதி திருவாரூர் அருகே இலவம்கார்குடி கிராமத்தைச் சேர்ந்த காமராசு என்ற விவசாயிக்கு நெஞ்சுவலி வந்து திருவாரூர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவுடன் இறந்து போனார். இதனை ஒட்டிப் பயிற்சி மருத்துவர் பிரபா மற்றும் செவிலியர்கள் மீது கடுமையான தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டனர். இது குறித்து மருத்துவர்கள் மாநிலம் எங்கும் ஆர்ப்பாட்டம் நடத்தி இருக்கிறார்கள். 2020 ஆம் ஆண்டு ஜீன் 8 அன்று மதுரை இராஜாஜி மருத்துவமனையில் கரும்பாலை முருகன் என்பவர் நோய் தீரச் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த போது, அதிகாலையில் ஐந்து பேர் கொண்ட ஆயுதக் கும்பல் வந்து அவரை வெட்டிப் படுகொலை செய்ததுடன், பணிபுரிந்த மருத்துவர்கள், ஊழியர்கள் தாக்கப்பட்ட வரலாறு இருக்கிறது. இவை அனைத்தும் ஸ்டெர்லைட், கொடநாடு எஜமான் எடப்பாடிகள் தலைமையிலான அ.தி.மு.க ஆட்சியில் நடைபெற்ற வரலாறுகளாக இருக்கின்றன. கடந்த காலத்தில் ஜெயலலிதா தலைமையிலான ஆட்சியிலும் மருத்துவர்கள், பணியாளர்கள் மீது தாக்குதல்கள் நடைபெற்றும் இருக்கின்றன.

2013 ஆம் ஆண்டு அப்போலோ மருத்துவமனை நடந்த விவகாரம் என்ன? அந்த வரலாறு பற்றி எடப்பாடி கூட்டங்கள் சொல்லத் தயாரா?

**கவிஞர் தமிழ்தாசன்**
கழகத் தீர்மானக்
குழுத் தலைவர்



2013ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் தேதி அப்பல்லோ மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த 'தினத்தந்தி' நிறுவனர் சிவந்தி ஆதித்தன் மிகவும் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தபோது, பல அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் முக்கியமானவர்கள் சென்று விசாரித்து வந்தனர். இந்நிலையில், அவரைப் பார்க்கச் சென்றார் அன்றைய தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா. அவரது வருகையால் மிகப் பெரிய அசம்பாவிதம் நடைபெற்றது. ஜெயலலிதா தமது படை பரிவாரங்களோடு அப்போலோ அவசர சிகிச்சைப் பிரிவில் உள்ளே நுழைந்து செல்லும்போது, அவருடன் வந்த பாதுகாவலர்கள் மற்றும் புகைப்படக் கலைஞர்கள் இன்னும் சிலர் அத்துமீறி உள்ளே நுழைய முயற்சி செய்தனர். அதனை சிகிச்சை அளித்துக் கொண்டிருந்த கருணாநிதி என்ற மருத்துவர் தடுத்து,

"முதல்வர் மற்றும் ஓரிருவர் மட்டும் செல்லட்டும். மற்றவர்கள் வெளியே இருங்கள்; அருள் கூர்ந்து காலணியோடு செல்லக்கூடாது: அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும் நோயாளிகள் பலர் பாதிக்கப்படுவர்; தொற்று ஏற்பட்டு விடக்கூடாது." என்று அறிவுரை கலந்த வேண்டுகோள் வைத்தார்.

ஆனால், "எப்படி எங்களைத் தடுக்கலாம்; நாங்கள் முதல்வரோடு வந்திருக்கும் நபர்கள்" என்று கூறியதோடு மருத்துவரது ஆடையைப் பிடித்து உலுக்கி, மிரட்டி அச்சுறுத்தினார்கள். உள்ளே நுழைந்த ஜெயலலிதா திரும்பிப் பார்த்து என்ன என்று கேட்டார் என்றாலும் அதனைக் கண்டு கொள்ளவில்லை; மருத்துவரின் அறிவுரையைக் கேட்கவுமில்லை. ஆனாலும், மருத்துவர் தகுந்த காரணங்களை எடுத்துச் சொன்னார். அதைக் கேட்காமல் அத்துமீறி உள்ளே படை பரிவாரங்கள் சென்றன. ஜெயலலிதா உள்ளே சென்று திரும்பிய பின்னும் நடந்தது என்ன? என்று கேட்டார். பிறகு இரண்டு நாள் கழித்து 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் ஒன்றாம் நாள் மருத்துவர் மீது ஆசைத் தம்பி என்ற காவல்துறை அதிகாரி கொடுத்த புகாரின் பெயரில், பல பிரிவுகளில் வழக்குப் பிணைந்து ,கைது செய்யப்பட்டுச் சைதைச் சிறையில் அடைக்கப்பட்டார். கழகத் தலைவர் கலைஞர் உட்பட அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் ஏடுகள் எல்லாம் அதைக் கண்டித்தன.பாதிக்கப்பட்ட மருத்துவர் திரு.கருணாநிதி மகள் வழக்கறிஞர் கல்வியில் இருந்த காரணத்தினாலும் சில வழக்கறிஞர்களை ஏற்பாடு செய்து நீதிமன்றம் சென்று, சில நாட்களுக்குப் பின்னால் பிணையில் எடுத்த வரலாறு இருக்கிறது. இப்படி அத்துமீறி நடந்து கொண்ட மருத்துவர் மீதான தாக்குதல், மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாவின் பார்வையில் காவல்துறை அதிகாரிகள் மிகப் பெரிய சட்ட ஒழுங்கிற்குச் சீர்கேடாக அமைந்தது என்பதை இந்நேரத்தில் மறந்து விடக்கூடாது..

இப்படி எல்லாம் அ.தி.மு.க. ஆட்சியில் அதிகார அத்துமீறல்கள் கொடி கட்டிப் பறந்தன. இன்று ஒன்றுமே தெரியாத பாப்பாக்கள் போல எடப்பாடிகளும், விஜயபாஸ்கர்களும், ஜெயக்குமார்களும் கழக அரசுக்கு எதிராகக் கூக்குரல் எழுப்புகின்றனர்.

இவற்றையெல்லாம் எடப்பாடிகள் விஜயபாஸ்கர்கள், ஜெயக்குமார்கள் சொல்ல மறந்தது ஏன்?